# 1 தெசலோனிக்கேயர் 4

## நவீன மொழிபெயர்ப்பாளர்களின் பகுதிப்பகுதியான பிரிவுகள்

| USB[4] | NKJV | NRSV | TEV | NJB |
|---|---|---|---|---|
| தேவனை பிரியப்படுத்துகின்ற வாழ்க்கை | கர்த்தருடைய வருகை | பரிசுத்தத்துக்கான அறிவுரை | தேவனை மகிமைப்படுத்தும் வாழ்க்கை | பரிசுத்தத்துக்கும் கருணைக்குமான அழைப்பு |
| 4:1-8 | 4:1-8 | 4:1-8 | 4:1-8 | 4:1-2 |
| | | | | 4:3-8 |
| | சகோதரத்துவமும் ஒழுக்கமுமான வாழ்க்கை | | | |
| 4:9-12 | 4:9-12 | 4:9-12 | 4:9-12 | 4:9-12 |
| கர்த்தரின் வருகை | கிறிஸ்துவின் வருகை குறித்தான ஆறுதல் | கர்த்தரின் வருகை குறித்தான கேள்விகள் | கர்த்தரின் வருகை | கர்த்தருடைய வருகையின் போது மரித்தவர்களும் ஜீவனுள்ளவர்களும் |
| (4:13:5-11) | | (4:13:5-11) | | |
| 4:13-14 | 4:13-18 | 4:13-18 | 4:13-14 | 4:13-14 |
| 4:15-18 | | | 4:15-18 | |

**வாசிப்பு சுழற்சி 3 (சிறந்த வேத வாசிப்புக்கான வழிகாட்டலிலிருந்து)**

*பந்திபந்தியான பிரிவுகளின் அடிப்படையில் எழுத்தாளரின் உண்மையான நோக்கத்தை அறிதல்*

இது ஒரு கற்றல் வழிகாட்டல் விளக்கவுரை. அதாவது, வேதாகமத்திற்குரிய உங்களுடைய தனிப்பட்ட பொருள் விளக்கத்துக்கு நீங்களே பொறுப்பாளர்கள். நம்மோடிருக்கும் வெளிச்சத்தோடு நாம் ஒவ்வொருவரும் கண்டிப்பாக நடக்க வேண்டியது அவசியம். நீங்களும், வேதாகமமும் பரிசுத்த ஆவியும் பொருள்விளக்கத்துக்கு இன்றியமையாதவர்கள். நீங்கள் இதனை விளக்கவுரையாளருக்கு விட்டுவிட முடியாது.

முழு அதிகாரத்தையும் ஒரே அமர்வில் வாசிக்கவும். விடய பிரிவுகளை இனங்கண்டுக்கொள்ளுங்கள். மேற்கூறப்பட்ட ஐந்து மொழிப்பெயர்ப்புக்களுடனும் உங்களுடைய விடய பிரிவுகளை ஒப்பிட்டுப்பாருங்கள். பகுதிப்பகுதியான பிரிவுகளானது வெளிப்பாடாயில்லாவிட்டாலும் மொழிப்பெயர்ப்பின் ஆதாரமாகிய எழுத்தாளருடைய நோக்கத்தினை புரிந்துக்கொண்டு பின்தொடருவதற்கான திறவுகோலாய் இருக்கிறது. ஒவ்வொரு பந்தியும் ஒரே ஒரு விடயத்திளை உள்ளடத்தியே காணப்படுகின்றது.

1. முதலாவது பந்தி
2. இரண்டாவது பந்தி
3. மூன்றாவது பந்தி
4. போன்றவை.

**1-12 வரையிலான வசனங்களின் விரிவான வரைகோடு**

A. அறிமுக குறிப்புரைகள், 1 தெச. 4:1-2

B. பாலியல் ஒழுக்கமின்மையை குறித்த எச்சரிக்கை 1 தெச. 4:3-8
 1. பரிசுத்தமாயிருங்கள் 1 தெச 4:3a
 2. பாலியல் ஒழுக்கமின்மைகலிலிருந்து விலகியிருக்க பழகுதல் 1 தெச 4:3b
 3. பாலியல்ரீதியாக தனிப்பட்ட ஒழுக்கங்களை கடைபிடித்தல் 1 தெச 4:4-5
 4. பாலியல் ஒழுக்கங்களை பேணுவதன் மூலம் உடன்படிக்கை சகோதரர்களை உரிமைகளை வஞ்சியாதிருங்கள்

C. மற்றைய கிறிஸ்தவர்களை குறித்த அறிவுரைகள், 1 தெச 4:9-12
 1. கிறிஸ்தவர்கள் ஒருவரை ஒருவர் அன்புகூற வேண்டும் 1 தெச 4:9-10
 2. இன்னும் அதிக அதிகமாய் பெருக வேண்டும் 1 தெச 4:10b
 3. அமைதலுள்ளவர்களாய் இருக்க வேண்டும் 1 தெச 4:11a
 4. உங்கள் சொந்த அலுவல்களை பார்க்க வேண்டும் 1 தெச 4:11 b
 5. உங்கள் சொந்த கைகளினாலேயே வேலை செய்ய வேண்டும் 1 தெச 4:11c
 6. அப்பொழுது தொலைந்துபோனவர்களுக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள் 1 தெச 4:12

**சொல் மற்றும் சொற்றொடர் ஆய்வு**

**NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 1 தெசோலோனிக்கேயர் 4:1-8**

**[1]. அன்றியும், இறுதியாக, சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக்கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்திசொல்லுகிறோம். [2.]கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே. [3]. நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து, [4] தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படாமல், [5]. உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து: [6.] இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்கவேண்டும்; முன்னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லி, சாட்சியாக எச்சரித்தபடியே இப்படிப்பட்ட விஷயங்களெல்லாவற்றையுங்குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார். [7.] தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். [8]. ஆகையால் அசட்டைபண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டைபண்ணுகிறான்.**

4:1 **"அன்றியும் இறுதியாக"** இது சொல்லர்த்தமாக 'மீதம் இருப்பவற்றுக்கு' என பொருள்படும். இது பவுலின் பிரயோகரீதியான பகுதியை ஆரம்பிக்கிறது. பவுலின் அநேக நிருபங்களை உபதேசம் மற்றும் பிரயோகம் என இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம், முதலாம் தெசலோனிக்கேயரில் இதனை செய்வதற்கு சற்று கடினமாக

இருக்கும். கடைசியான முக்கிய விடயத்தை முன்வைப்பதற்கு பவுல் இச்ச்சொற்றொடரை பயன்படுத்துகிறார், முடிவுரையின் முன்னுரையாக அல்ல. (ஒ.ப. 2 கொரி. 13:11; எபே. 6:10; 2 தெச. 3:1).

▣ **"சகோதரரே"** ஒரு புதிய விடயத்தை ஆரம்பிப்பதற்கு பவுல் இப்பதத்தை பயன்படுத்துகிறார் (ஒ.பா. 1 தெச . 1:4; 2:1,9,14,17; 3:7; 4:1,10,13; 5:1,4,12, 14,25,26,27; 2 தெச. 1:3; 2:1,13,15; 3:1,6,13).

▣ **“வேண்டுகோள் மற்றும் அறிவுறுத்தல்”** இந் நிகழ்கால செயற்பாட்டு குறியினை, தொடர்ச்சியான செயற்பாட்டின் நிமித்தமாகவும் அப்போஸ்தலனாக தன்னுடைய கட்டளையை கனிவாக வெளிப்படுத்தவும் பவுல் பயன்படுத்துகிறார் (ஒ.பா. 1 தெச . 4:2,11; 2 தெச. 3:4,6,10,12).

▣ **"நீங்கள் எங்களிடத்திலிருந்து பெற்றுக்கொண்டபடியே *அறிவுறுத்தல்கள்*"** இது இறந்த கால செயற்பாட்டு அறிகுறியாகும். இது பவுல் அவர்களுடனே தங்கியிருந்த காலத்தை குறிப்பிடுகிறது. இதன் கிரேக்க வார்த்தையானது "பாரம்பரிய படிப்பினைகளை ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல்" என பொருள்படும். (ஒ.பா. 1 தெச. 2:13; 1 கொரி. 15:1). இரட்சிப்படுவது (நீதிமானாக்கப்படுவது) எவ்வாறு என்பதை மாத்திரமல்ல, இரட்சிக்கப்பட்டவர்களாக (பரிசுத்தமாக்கப்பட்டவர்களாக) எவ்வாறு வாழ்வது என்பதனையும் பவுல் அவர்களுக்கு கற்று கொடுத்திருந்தார்.

▣ **"நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும்"** இது ஒரு நிகழ்கால வினையெச்சமாகும். நடத்தல் என்பது விசுவாச வாழ்க்கைமுறையின் வேதாகம உருவமாகும். (ஒ.பா. தெச. 2:12; எபே. 2:10; 4:1,17; 5:2,15; கொலோ. 1:10; 2:6). கிறிஸ்தவமானது ஆரம்பத்தில் "மார்க்கம்" என்றே அழைக்கப்பட்டது (ஒ.பா. அப்போ. 9:2; 19:9,23; 22:4; 24:14,22; 18:25-26). விசுவாச வாழ்க்கையில் நிலைத்திருத்தலை குறித்து இது கூறுகிறது. மனந்திரும்புதல் மற்றும் விசுவாசதினாலுண்டான நம்முடைய முதல் பிரதியுத்தரமானது கீழ்ப்படிவு மற்றும் நிலைத்திருத்தல் என்பவற்றினூடாக தொடரப்பட வேண்டும். நித்தியா வாழ்வானது வெளியரங்கமான குணாதிசயங்களை கொண்டுள்ளது! கிறிஸ்துவுக்குள்ளாக ஒவ்வொரு நாளும் பரிசுத்தமானது, விசேஷமானது மற்றும் ஆராதனைக்கு ஊழியத்திற்கும் பயன்படுத்தப்பட வேண்டியது.

▣ **"தேவனை பிரியப்படுத்தவும்"** அவருடைய பிள்ளைகளை குறித்தான தேவனுடைய சித்தம் இறந்தபின் பரலோகத்தை அடைவது அல்ல, இப்பொது கிறிஸ்துவை போல மாறுதல். (ஒ. பா. ரோ. 8:28-29; கலா. 4:19; எபே. 1:4; 2:10; 1 பேதுரு. 1:15).

**NASB** **"(நீங்கள் நடக்கிற பிரகாரமாக)"**
**NKJV** **[நீக்கப்பட்டுள்ளது]**
**NRSV** **"(நீங்கள் செய்வது போலவே")**
**TEV** **"நீங்கள் வாழ்கின்ற பிரகாரமாகவே"**
**NJB** **"நீங்கள் ஏற்கனவே வாழ்ந்து கொண்டிருப்பது போல"**

ஒரு கிரேக்க கையெழுத்து பிரதியின் சிக்கல், இச்சொற்றொடருடன் தொடர்புப்பட்டுள்ளது. இச்சொற்றொடறானது கிரேக்க கையெழுத்து பிரதிகளான $D^c$, K, L, மற்றும் Textus Receptus எழுத்துக்கள் ஆகியவற்றில் காணப்படவில்லை. MSS א, A, B, D*, F, G மற்றும் சீரியாக், கோப்டிக், வல்கெட் ஆகிய மொழிபெயர்ப்புக்களில் காணப்படுகிறது. புராதன கையெழுத்து பிரதிகள் இதனை கொண்டுள்ளதும்

பின்னைய பிரதிகள் இதனை தவிர்த்துள்ளதும் ஆச்சரியமளிக்கிறது. தவறுதலாக இது விடுபட்டிருக்கலாம் என கருதமுடியும். UBS[4] ஆனது இதன் உட்சேர்த்தலை "A" (நிச்சயமானது) என மதிப்பிடுகிறது.

இது நிகழ்கால சாதாரண நிலை அல்லது கட்டளை நிலையை குறிக்கிறது. ஏனெனில் கிறிஸ்துவை போல வாழும் அவர்களது வாழ்க்கை முறையின் மீது பவுல் கொண்ட நம்பிக்கையின் நிமித்தமாக இது பெரும்பாலும் சாதாரண நிலையாக இருக்கலாம். (ஒ.பா. NASB, NRSV, TEV, and JB).

▣ **"நீங்கள் அதிகதிகமாய் தேறும்படிக்கு**" அவர்கள் நன்றாக தேறி வருகிறார்கள், ஆனாலும், பவுல் இன்னும் மேன்மையான பரிசுத்தத்துக்கு அவர்களை ஊக்கப்படுத்துகிறார். (ஒ.பா. 1 தெச. 4:10). தெச 3: 12ல் விசேஷித்த தலைப்பை பார்க்கவும்: ஏராளமாய் பெருகுதல் (*Perisseuō*).

**4:2**
**NASB, NKJV "கட்டளைகள்"**
**NRSV, NJB,**

**TEV "விதிமுறைகள்"**

பதவி நிலையின் அடிப்படையில் கட்டளை அதிகாரங்கள் கைமாற்றப்படுவதனை மிகவும் அரிதான இவ் இராணுவ பதம் குறிக்கிறது (ஒ.பா. 1 தீமோ. 1:5,18).

▣ **"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் *அதிகாரத்தினாலே*"** இவை பவுல் தனிப்பட்ட எண்ணங்கள் அல்ல, மாறாக இயேசுவின் படிப்பினைகளாகும். பவுலின் அப்போஸ்தல அதிகாரமானது இயேசுவின் அதிகாரத்திலேயே தங்கியுள்ளது (ஒ.பா. 1 தெச. 4:8).

**4:3-6** கிரேக்க மொழியில் இது ஒரே வசனமாகும்.

**4:3 " இது தேவனுடைய சித்தமாயிருக்கிறது**" இங்கு பெயர்ச்சொற்குறி காணப்படவில்லை. ஆகவே, தேவனுடைய சித்தங்களில் ஒன்று (ஒ.பா. எபே. 5:17), இரட்சிப்புக்கு பின் (ஒ.பா. யோவான் 6:40)

**SPECIAL TOPIC: THE WILL (*THELĒMA*) OF GOD**
**விசேஷித்த தலைப்பு: தேவனுடைய சித்தம் (தெலீமா)**

தேவனுடைய சித்தமானது பல வகைகளை உள்ளடக்கியுள்ளது.

யோவானின் சுவிசேஷம்

- இயேசு பிதாவினுடைய சித்தத்தை செய்வதற்கு வந்தார் (ஒ.பா. யோவான் 4:34; 5:30; 6:38)
- பிதா குமாரனிடத்தில் கொடுத்தவர்களை கடைசி நாட்களில் எழுப்புவதற்கு (ஒ.பா. யோவான் 6:39)
- குமாரனிடத்தில் எல்லாரும் விசுவாசம் வைக்கும்படியாக (ஒ.பா. யோவான் 6:29,40)

- பிதாவினுடைய சித்தத்திற்கமையபெற்ற ஜெபத்திற்கு பதிலளித்தல் (ஒ.பா. யோவான் 9:31 மற்றும் 1 யோவான் 5:14)

சமநோக்கு சுவிசேஷங்கள்

- தேவனுடைய சித்தத்தை செய்வது கடினமானது (ஒ.பா. மத். 7:21)
- தேவனுடைய சித்தம் செய்வது, நம்மை இயேசுவினுடைய சகோதர சகோதரியாக மாற்றும் (ஒ.பா. மத். 12:50; மாற்கு 3:35)
- ஒருவரும் கெட்டுபோவது தேவனுடைய சித்தமல்ல (ஒ.பா. மத் 18:14; 1 தீமோ. 2:4; 2 பேதுரு 3:9)
- கல்வாரியே, இயேசு கிறிஸ்துவை குறித்த பிதாவினுடைய சித்தமாயிருக்கிறது (ஒ.பா. மத். 26:42; லூக் 22:42)

பவுலினுடைய நிருபங்கள்

- எல்லா விசுவாசிகளுடைய முதிர்ச்சியும் ஊழியமும் (ஒ.பா. ரோமர் 12:1-2)
- இந்த பொல்லாத காலத்திலிருந்து விசுவாசிகள் விடுவிக்கப்படல் (ஒ.பா. கலா. 1:4)
- தேவனுடைய மீட்பின் திட்டமே அவருடைய சித்தமாகும் (ஒ.பா. எபே. 1:5,9,11)
- விசுவாசிகள் ஆவியினால் நிறைந்த வாழ்கையை அனுபவித்து வாழ்கிறார்கள் (ஒ.பா. எபே 5:17-18)
- விசுவாசிகள் தேவனுடைய அறவினாலே நிறைந்திருக்கிறார்கள் (ஒ.பா. கொலோ. 1:9)
- விசுவாசிகள் பூரணமாகவும் முழுமையாகவும் மாற்றப்பட்டார்கள் (ஒ.பா. கொலோ. 4:12)
- விசுவாசிகள் பரிசுத்தப்படுத்தப்படுகின்றனர் (ஒ.பா. 1 தெசலோ. 4:3)
- விசுவாசிகள் எல்லாவற்றிலும் நன்றி செலுத்துகிறார்கள் (ஒ.பா. 1 தெசலோ. 5:18)

பேதுருவின் நிருபங்கள்

- விசுவாசிகள் சரியானதை செய்து (உம். சட்ட அதிகாரங்களுக்கு கட்டுபடல்) புத்தியில்லாதவர்களின் வாயை அடைத்து சுவிசேஷத்துக்கு சந்தர்;ப்பத்தை வழங்குகிறார்கள் (ஒ.பா. 1 பேதுரு 2:15)
- விசுவாசிகள் துன்பப்படல் (ஒ.பா. 1 பேதுரு 3:17; 4:19)
- விசுவாசிகள் சுயநலமான வாழ்க்கை வாழவில்லை (ஒ.பா. 1 பேதுரு 4:2)

யோவானுடைய நிருபங்கள்

- விசுவாசிகள் எப்போதும் நிலைத்திருத்தல் (ஒ.பா. 1 யோவான் 2:17)

- ஜெபம் பதிலளிக்கப்பட விசுவாசிகளுக்கான முக்கிய அம்சங்கள்

Copyright © 2014 Bible Lessons International

▣ **"உங்கள் பரிசுத்தம்"** இவ்வார்த்தையானது "தூய" மற்றும் "புனித" ஆகிய வார்த்தைகளின் வேர்ச்சொல்லினை கொண்டுள்ளது. பரிசுத்தமானது, நீதிமானாக்கப்படுதலைப் போன்றே கிருபையினாலுண்டாகும் உடனடியான முதல் கிரியையாகும். (ஓ.பா. 1 கொரி. 1:2,30; 6:11). நிலையின் அடிப்படையில் விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறார்கள். ஆகிலும் அது, வாழ்க்கையின் குணாதிசயமாக, பரிசுத்தமாக்குதலாக படிப்படியாக மாற்றப்பட வேண்டும். (ஓ.பா. 1 தெச. 4:7; 3:13;

ரோ. 6:19-23). கிறிஸ்துவின் சாயலாக மாறுதலே ஒவ்வொரு கிறிஸ்தவனை குறித்தான தேவனுடைய சித்தமாயிருக்கிறது! பரிசுத்தமாக்குதலிலிருந்து நிதிமானாக்கப்படுதலை நாம் பிரிக்கமுடியாது.

**SPECIAL TOPIC: NT HOLINESS / SANCTIFICATION**
**சிறப்பு தலைப்பு: புதிய ஏற்பாடு பரிசுத்தத்தன்மை / பரிசுத்தமாக்குதல்**

பாவிகள் மனந்திரும்புதலிலும் விசுவாசத்திலும் இயேசுவிடம் திரும்பும்போது (ஓ.பா. மாற்கு 1:15; அப்போஸ்தலர் 3: 16, 19; 20:21), அவர்கள் உடனடியாக நீதிமனக்கப்பட்டு பரிசுத்தப்படுத்தப்படுகிறார்கள் என்று புதிய ஏற்பாடு கூறுகிறது. இது கிறிஸ்துவில் அவர்களின் புதிய நிலைப்பாடாகும். அவருடைய நீதியே அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது (ஓ.பா. ஆதி. 15: 6; ரோமர் 4). அவை நீதியானதும் புனிதமானதும் என்று அறிவிக்கப்படுகின்றன (தேவனின் சட்டரீதியான செயலாகும்).

ஆனால் புதிய ஏற்பாடு விசுவாசிகளை பரிசுத்தத்தன்மை அல்லது பரிசுத்தமாக்குதலுக்கு வலியுறுத்துகிறது. இது இயேசு கிறிஸ்துவின் முடிக்கப்பட்ட வேலை மற்றும் அணுகுமுறையில் கிறிஸ்துவின் சாயலைப் பிரதிபலிப்பதற்கான ஒரு அழைப்பு கொண்ட இரண்டு ஒரு இறையியல் நிலைப்பாடுகளையும் மற்றும் அன்றாட வாழ்க்கையில் செயல்களையும் உள்ளடக்கியது. இரட்சிப்பு ஒரு இலவச ஈவு மற்றும் முழு வாழ்க்கைக்கான கிரயம் ஆகும், அதே போலவே பரிசுத்தமாகுதலும்.

| ஆரம்ப நிலை நியாயப்படுத்தல் மற்றும் பரிசுத்தமாக்குதல் | ஒரு முற்போக்கான பரிசுத்தமாக்குதல், கிறிஸ்தவத்தன்மை |
|---|---|
| அப்போஸ்தலர் 26:18 | ரோமர் 6:19 |
| ரோமர் 15:16 | 2 கொரி. 7: 1 |
| 1 கொரிந்தியர் 1: 2-3; 6:11 | எபேசியர் 1: 4; 2:10 |
| 2 தெசலோனிக்கேயர் 2:13 | 1 தெச. 3:13; 4: 3-4,7; 5:2 |
| எபிரெயர் 2:11; 10: 10,14; 13:12 | 1 தீமோத்தேயு 2:15 |
| 2 பேதுரு 1: 2 | 2 தீமோத்தேயு 2:21 |

1 பேதுரு 1: 15-16
எபிரெயர் 12:14

இரட்சிப்பின் குறிக்கோள் நாம் இறக்கும் போது சொர்க்கம் அல்ல, ஆனால் இப்போது கிறிஸ்துவின் தன்மையை தரிப்பதேயாகும் (ஒ.பா. ரோமர் 8: 28-30; 2 கொரி. 3:18; கலா. 4:19; எபே. 1: 4; 4:13; 1 தெச. 3:13; 4: 3; 5:23; 2 தெச. 2:13; தீத்து 2:14; 1 பேது. 1:15), எங்கள் சாட்சியைக் காண்பவர்கள் இயேசுவிடம் ஈர்க்கப்பட்டு எங்களுடன் பரலோகத்திற்குச் செல்வார்கள்! பரிசுத்தமாக்குதல், நியாயப்படுத்துதல் போன்றது, அது ஒரு பரிசு மற்றும் தேர்வாகும்!

Copyright © 2014 Bible Lessons International

▣ **"நீங்கள் வேசிமார்க்கத்திற்கு விலகியிருந்து"** சொல்லார்த்தமாக இது "விபச்சாரம்" எனப்படும் திருமணத்துக்கு முன்னான மற்றும் திருமணத்துக்கு புறம்பான பாலியல் உறவானது பழைய ஏற்பாட்டில் வித்தியாசமான வார்த்தைகளில் காட்டப்பட்டுள்ளது, ஆனால் புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தையின் அர்த்தமானது பரந்தளவில் காண்பிக்கப்படுகிறது. விபச்சாரம் என்பது, ஓரினசேர்க்கை மற்றும் மிருக புணர்ச்சி உள்ளடங்கலாக எல்லாவித பாலியல் ஒழுக்கக்கேட்டையும் குறிக்கிறது. புறமத வழிபாடுகளானது பாலியல் கிரியைகளை கொண்டதாய் உள்ளது.

**4:4**

| | |
|---|---|
| **NASB, NKJV** | **"சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு"** |
| **NRSV** | **"ஆண்டுகொள்வதற்கு"** |
| **TEV** | **"எவ்வாறு எடுத்துக்கொள்வது"** |
| **NJB** | **"பயன்படுத்துவதற்கு"** |

இது ஒரு நிகழ்கால நடுநிலை (மத்தியஸ்தர்) வினையெச்சம். சொல்லார்த்தமாக "தொடர்ச்சியாக பெற்று கொள்ளல் அல்லது சுதந்தரித்துக்கொள்ளல்".

| | |
|---|---|
| **NASB, NKJV** | **"அவனவன் தன்தன் சரீரத்தை"** |
| **NRSV** | **"உங்கள் சொந்த சரீரத்தை"** |
| **TEV** | **"ஒரு மனைவி"** |
| **NJB** | **"அவருக்கு சொந்தமான சரீரம்"** |

இது" தன் சொந்த சரீரம்" அல்லது" தன் சொந்த மனைவி" என பொருள்படும். மொபுசெஸ்டியாவின் தியொடர், அகஸ்டின், ரபானிகல் என்பவர் பாவனையில் 1 பேதுரு 3:7 மற்றும் செப்துவாஜின் மொழிபெயர்ப்பானது இதனை "மனைவி" என்று அர்த்தப்படுத்துகிறது (ஒ.பா. TEV). ஆனால் ஆதி சபை பிதாக்கள் (உ.ம். டேர்டுலியன் மற்றும் கிறிஸ்சோஸ்டம்) இதனை சரீரம் என மொழிபெயர்த்திருப்பது, இப்பின்னணிக்கு சரியாக பொருந்துகிறது (ஒ.பா. NRSV, JB, NIV). 2 கொரி. 4:7ல் பாத்திரம் எனும் பதம் சரீரத்தை குறிக்க பயன்படுத்தப்படுகிறது.

▣ **"பரிசுத்தப்படுத்தலிலும் கனத்திலும்"** ஒருவன் வாழ்கிற வாழ்க்கையை தேவன் மாற்றுவார் என்பதை அறிந்திருத்தல். இன்னொருவருடைய சித்தத்தில் தங்கியிருக்கும் உக்கிராணக்காரர்களாய் விசுவாசிகள் இருக்கிறார்கள். ஒவ்வொரு விசுவாசிகளும் விழுந்துபோன இவ்வுலகத்தில் தேவனுடைய மறுரூபமாக்கும் வல்லமையை காண்பிக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. கிறிஸ்தவ திருமணமானது, விழுந்து போன குழப்பத்திலுள்ள இவ்வுலக்கத்துக்கு சக்திவாய்ந்த சாட்சியாய் இருக்கிறது.

**4:5 "மோக இச்சைக்குட்படாமல்"** விழுந்து போன இவ்வுலகமானது பாலியல்ரீதியாக தன்னை கட்டுப்படுத்த முடியாத நிலையினை இது காண்பிக்கின்றது (புறமத வழிபாடு). இச்சையடக்கமானது ஆவியினால் நிரப்பப்பட்ட ஆவியினால் நடத்தப்படுகின்ற வாழ்க்கையின் குணாதிசயமாகும் (ஒ.பா. கலா. 5:23).

▣ **"புறஜாதியரை போல"** சொல்லார்த்தமாக இது "தேசங்கள்" என் பொருள்படும். ஆனாலும், இங்கு, இப்பதமானது யூதரல்லாதவர்களை குறிப்பிடவில்லை மாறாக, கிறிஸ்தவர்களல்லாதவர்களை குறிப்பிடுகிறார். பவுல் நாட்களிலபுறமதத்தவர்களின் வாழ்க்கைமுறையானது மிகவும் ஒழுக்கக்கேடாய் காணப்பட்டது.

▣ **"தேவனை அறியாதவர்கள்"** இது இயற்கையின் வெளிப்பாட்டை புறக்கணிக்கவில்லை (ஒ.பா. சங். 19:1-6 மற்றும் ரோமர் 1-2), ஆனால் "தனிப்பட்ட அறிவினை" குறித்து பேசுகிறது (ஒ.பா. கலா. 4:8-9). பழைய ஏற்பாட்டில் "அறிதல்" என்பது தனிப்பட்ட உறவில் நெருக்கமாக இருத்தல் என அர்த்தப்படும் (ஒ.பா. ஆதி .4:1; எரே. 1:5). புறஜாதியர் தேவனிடத்திலிருந்து தூரமாக்கப்பட்டவர்களாய் இருந்தார்கள் (ஒ.பா. எபே. 2:11-13; 5:8; கொலோ.1:21).

**4:6 "மீறுதல்"** இப்பதம் "கட்டுப்பாடுகளுக்கு அப்பால் செயற்படல்" என பொருள்படும்.

▣ **"வஞ்சித்தல்"** இப்பதம் "சமயத்தை பயன்படுத்திக்கொள்ளல்" என அர்த்தப்படும். இது "பேராசை" எனும் வார்த்தையுடன் தொடர்புபட்டதாய் உள்ளது.

▣ **"அவனுடைய சகோதரர்"** இன்னொரு விசுவாச குடும்பத்துடன் பாலியல் சுதந்திரத்தை பேணுதல் என்பதை குறிக்கலாம் (ஒ.பா. 1 தெச. 4:9). ஆனால் பின்னணியின் படி சகோதரன் எனும் "இப்பதம்"எந்தவொரு மனிதனுக்கோ , அயலவருக்கோ ஒப்பாக பயன்படுத்தப்படுகிறது (ஒ.பா. 1 தெச. 4:12).

▣ **"இந்த விடயத்தில்"** இது ஒரு பெயர்சொற்குறியாகையால் 1 தெச 4: 3-5 இனை குறித்து நிற்கிறது (உ.ம். பாலியல் ரீதியான பரிசுத்தம்). ஆகையால் இது பாலியல் ரீதியான விடயங்களுக்கு உருவக அணியாக பயன்படுத்தப்படலாம் அல்லது பவுல் 1 தெச 4:6ல் விடயத்தை மாற்றுகிறார், இது தற்போது பொருளாதார விடயங்களுடன் தொடர்புபட்டதாய் இருக்கின்றது. முதலாவது தெரிவே சிறந்ததென்று நான் நினைக்கிறன்.

▣ **"ஏனெனில் கர்த்தரே எல்லாவற்றுக்கும் நீதியை சரிக்கட்டுகிறவர்**" இது இரட்டை தன்மையுடைய நீதியை குறிக்கிறது - தற்காலிகம் (ஒ.பா. ரோ. 1:24,26,28) மற்றும் இறுதியானது (ஒ.பா. மத். 25:31ff.) YHWH யாஹாவே ஒழுக்கமுள்ள தேவனாய் இருக்கிறார் (ஒ.பா. கலா. 6:7.) 1 தெச 4:6, 7அ மற்றும் 8அ ஆகியவற்றில் விசுவாசிகள்

ஏன் பரிசுத்தமாய் வாழ வேண்டும் என்று மூன்று வித்தியாசமான காரணங்கள் குறிப்பிடப்படுகின்றன.

▣ **"முன்னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லி, சாட்சியாக எச்சரித்தபடியே"** இது பாலியல் புனிதத்தை குறித்த வலுவான கூற்றாகும் (ஒ.பா. எபி.13:4). விசேஷித்த தலைப்பை பார்க்கவும்: Paul's Use of Huper Compounds at Gal. 1:13.

**4:7 "தேவன் அழைத்திருக்கிறார்**" இரட்சிப்பிலும் பரிசுத்தத்திலும். தேவனே எப்போதும் முதலடியை எடுத்து வைக்கிறவராயிருக்கிறார் (ஒ.பா. யோவான் 6:44,65)

**4:8 "அசட்டைபண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தேவனையே அசட்டைபண்ணுகிறான்"** இது சொல்லார்த்தமாக "அற்ப மதிப்பில் நடாத்துவது" என பொருள்படும். வாழ்க்கைமுறையின் நடக்கைகளானது சுவிசேஷத்தின் சத்தியத்துடன் ஒன்றிணைந்து செல்லுல் அவசியமாகும் என பவுல் வலியுறுத்துகிறார். இது தேவனுடைய சாத்தியங்களாகும், பவுலினுடையதல்ல, 2:13; 3:1-2.

▣ **"தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின"** இது நிகழ்கால செயற்பாடு எச்சவினையாகும். நமக்குள் வசிக்கும் ஆவியானவரை ஆரம்பம் மற்றும் தொடர்ச்சியான அனுபவமாக காட்டுகின்றது (உ.ம்., அப்போ. 2:38; 2 கொரி. 1:22; 5:5; 1 யோவான் 3:24). உயிர்த்தெழுந்தலை பொறுத்தவரையில் இது, தெய்வீக வாசம்பண்ணுதலின் வாக்குத்தத்தமாய் இருக்கிறது. திரித்துவத்தின் மூன்று ஆள்த்துவங்களும் மீட்பின் நிகழ்வுகளில் ஈடுப்பட்டுள்ளனர். (1) ஆவியானவர் (ஒ.பா. ரோ. 8:9-10); (2) குமாரன் (ஒ.பா. மத. 28:20; கொலோ. 1:27); மற்றும் (3) பிதா (ஒ.பா. யோவான் 14:23) என்போர் விசுவாசிகளுக்குள் வாசம் பண்ணுகிறார்கள்.

**NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 1 தெசலோனிக்கேயர் 4: 9-12**

**[9]சகோதர சிநேகத்தைக்குறித்து நான் உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை; நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்கு தேவனால் போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களே. [10]. அந்தப்படி நீங்கள் மக்கெதோனியா நாடெங்குமுள்ள சகோதரரெல்லாருக்கும் செய்துவருகிறீர்கள். சகோதரரே, அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய்ப் பெருகவும்; [11]புறம்பேயிருக்கிறவர்களைப்பற்றி யோக்கியமாய் நடந்து, ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும்படிக்கு, [12]நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே, அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக் கைகளினாலே வேலைசெய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்.**

**4:9**

| | |
|---|---|
| **NASB** | **"சகோதர அன்பிலே"** |
| **NKJV** | **"சகோதர அன்பிலே"** |
| **NRSV** | **"சகோதர சகோதரிகளின் அன்பிலே"** |
| **TEV** | **"உங்கள் சகா விசுவாசிகளின் அன்பிலே"** |
| **NJB** | **"நம் சகோதரரை நேசித்து"** |

இது பிலதெல்பியா, *philadelphia* என்கிற கிரேக்க பதமாகும். இது உடன்படிக்கை பங்காளர்களின் அன்பை குறிக்கிறது (ஒ.பா. ரோ. 12:10; எபி.13:1; 1 பேதுரு. 1:23; 2 பேதுரு

1:7) தொலைந்து போனவர்களை நேசிப்பதை குறித்த சமத்துவமான வார்த்தை 1 தெச 4:12ல் காணப்படுகிறது (ஒ.பா. 1 தெச.3:12).

▣ **"உங்களுக்கு ஒருவரும் எழுத வேண்டுவதில்லை"** பவுல் சாதுரியமான முறையில் அவர்களுக்கு உறுதிப்படுத்துவதோடு இன்னும் அதிகமான பிரயாசத்துக்கு அவர்களை ஊக்கப்படுத்துகிறார் (ஒ.பா. 1 தெச. 4:10இ). இது உபதேச காரியங்களை குறித்ததல்ல, (உ.ம். இரண்டாவது வருகை) மாறாக பிரயோகமும் ஒழுக்கமுமுள்ள வாழ்க்கைமுறையையும் குறிக்கிறது.

▣ **"ஏனெனில் நீங்கள் தேவனால் போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களே"** இது நிகழ்கால வசனமாகும். வாசம்செய்யும் ஆவியானவர் தொடர்வது போல இப்படிப்பினையானது தொடரும் (ஒ.பா. 1 தெச. 5:1; யோவான் 14:26; 16:13; 2 கொரி. 9:1; 1 யோவான் 2:20,27). இது புதிய உடன்பாட்டின் அடையாளமாய் இருக்கிறது (ஒ.பா. Jஎரே. 31:33-34). கிரேக்க வார்த்தையான *theodidaktoi* தியோடிக்டக்டோய் (புதிய ஏற்பாட்டில் இவ்விடத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது) எனும் பதம் "தேவன் கற்றுக்கொடுத்தார்" (ஒ.பா. யோவான் 6:45) மற்றும் இதன் பொருள் "ஒருவரில் ஒருவர் அன்பு செய்தல்" (ஒ.பா. யோவான் 13:34; 15:12,17; 1 யோவான் 2:7-8; 3:11,23; 2 யோவான் 5).

**4:10 "நீங்கள் செய்துவருகிறீர்கள்"** இது மற்றுமொரு நிகழ்கால வினைச்சொல்லாய் இருக்கிறது. தொடர்ச்சியான ஒரு கிரியை குறிக்கிறது. (ஒ.பா. 1 தெச.4:17). பவுல் அவர்களுடைய அன்பை உறுதிப்படுத்துகிறார் ஆனால் இன்னும் அதிகமாய் செய்யும் படி சவால் விடுகிறார் (1 தெச 4:1ல் அவர்களுடைய வாழ்க்கை முறையை குறித்து செய்தது போல)

▣ **"இன்னும் அதிகமாய் பெருகவும்**" அவர்கள் நன்றாக செய்து வருகிறார்கள். ஆனால் இன்னும் செய்யவேண்டும் என குறிப்பிடுகிறார் (ஒ.பா. 1 தெச. 4:1). அன்பே தேவனுடைய அடையாளமாய் இருக்கிறது. நாங்கள் திருப்தியாய் ஒருபோதும் அன்பு செய்ய முடியாது (ஒ.பா. 1 தெச. 3:12). விசேஷித்த தலைப்பை பார்க்கவும்: 1 தெச. 3:12 ல்

**4:11**

| | |
|---|---|
| **NASB** | **"அமைதலுள்ள வாழ்க்கை வாழ்வதையே உங்கள் நோக்காக கொண்டு"** |
| **NKJV** | **"நீங்களும் அமைதலுள்ள வாழ்க்கை வாழ்வதையே வாஞ்சையாக கொண்டு"** |
| **NRSV** | **"அமைதியாக வாழ்வதை வாஞ்சையாக கொண்டு"** |
| **TEV** | **"அமைதலுள்ள வாழ்க்கை வாழ்வதையே உங்கள் இலட்சியமாக கொண்டு"** |
| **NJB** | **"சகோதரரே, இன்னும் அதிகமாக செயற்பட்டு அமைதலுள்ள வாழ்க்கை வாள்வதைநோக்காக கொள்ளும் படி உங்களை துரிதப்படுத்துகிறேன்"** |

வசனம் 11ல் நான்கு நிகழ்கால வினையெச்சங்களும் தொடராக, வேண்டுகோள், கட்டளையின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாம் வருகையை எதிர்நோக்கியிருக்கும் இவ் ஆர்வமுள்ள சூழ்நிலையில் பொறுமையையும் இயல்பு வாழ்க்கையையும் அறிவுறுத்துவதாக பெரும்பாலும் இருக்கலாம் (ஒ.பா. 2 தெச. 3:10-12). "ஆயத்தமாயிருங்கள், விசுவாசமாயிருங்கள்"

இப்போது "தயாராகுவதில்லை"என்பதே இப்பகுதி மக்களுக்கு புதிய ஏற்பாட்டின் செய்தியாகும்.

"இலக்கு" எனும் பதமானது "கனமுள்ளதாய் கருதுதல்" அல்லது "வாஞ்சை" எனப்படும். இது ரோமர் 15:20 மற்றும் 2 கொரி 5:9 திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

▣ **"உங்கள் கைகளினாலேயே வேலை செய்து**" இவ்வெழுத்தாக்கத்தின் சரித்திர பின்னணியை நினைவு படுத்துவோமானால், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை குறித்த பவுலின் போதனையை தவறாக புரிந்துக்கொண்ட சபை, கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்து தங்கள் வேலையை கைவிட்டனர் (ஒ.பா. 2 தெச. 2:1-4 மற்றும் 3:6-15).

கிரேக்க கலாச்சாரத்தில் கைத்தொழிலானது அடிமைகளுக்கே உரித்தான வேலையாக கருதப்பட்டது. ரபிகள் உட்பட தங்கள் சுய தேவைக்காக ஆனால் எபிரேய கலாச்சாரத்தில் எல்லாருக்கும் ஒரு தொழில் தேவையாயிருந்தது (ஒ.பா. அப்போ. 20:35; 1 கொரி. 4:17).

சில புராதன கையெழுத்து பிரதிகள் א*, A, D (NRSV) "உங்கள் சொந்த கைகளினாலேயே" என்பதை சேர்த்துள்ளது. ஆனால் ஏனையவை ( א$^{2}$, B, D*) அதனை தவிர்த்துள்ளது. UBS$^{4}$ ஆனது இதனை சேர்க்க வேண்டுமா என்பதில் நிச்சயமற்ற தன்மையை காணப்பிக்கின்றது ("சி" மதிப்பீடு).

▣ **"நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே**" இது கட்டளையின் வலிமையான கூற்றாய் இருக்கிறது (ஒ.பா. 2 தெச. 3:4,6,10,12).

**4:12**

| | |
|---|---|
| **NASB, NRSV** | **"புறம்பேயிருக்கிறவர்களைப்பற்றி யோக்கியமாய் நடந்து கொண்டு "** |
| **NKJV** | **"புறம்பேயிருக்கிறவர்களைப்பற்றி யோக்கியமாய் நடந்து** |
| **TEV** | **"இவ்விதமாக அவிசுவாசிகளிடத்தில் உங்கள் கனத்தை பெற்றுக்கொள்வீர்கள்"** |
| **NJB** | **"சபையை விட்டு புறம்பேயிருக்கிறவர்களிடத்தில் நீங்கள் கனம் பெற்றவர்களாய் இருப்பீர்கள்"** |

ஜனங்கள் பார்க்கிறார்கள். நாம் சாட்சிகளாய் இருக்கிறோம் (ஒ.பா. மத். 5:13-16;கொலோ. 4:5; 1 தீமோ. 3:7; 5:14; 6:1; தீத்து 2:5).

| | |
|---|---|
| **NASB** | **"எவ்வித தேவையும் இல்லாதவர்களாய்"** |
| **NKJV** | **"ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும்படிக்கு"** |
| **NRSV** | **"ஒருவரிலும் தங்கியில்லாதவர்களாய்"** |
| **TEV** | **"உங்கள் தேவைக்காக ஒருவரிலும் தங்கியில்லாதவர்களாய்"** |
| **NJB** | **"நீங்கள் அவர்களில் தங்கியில்லாதவர்களாய்"** |

வேலையை விட்டுவிட்ட கிறிஸ்தவர்கள் தங்கள் தேவையை பூர்த்தி செய்வதற்காக ஏனைய கிறிஸ்தவர்களை எதிர்பார்த்து இருந்தனர். கிறிஸ்தவ குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்ய தங்கள் சம்பத்துக்களை விசுவாசிகள் பயன்படுத்த வேண்டும் (ஒ.பா. 2 கொரி. 8-9; எபே. 4:28), ஆனால் வேலையை விட்டு விட்டு இருப்பவர்களுக்கு அல்ல.

**SPECIAL TOPIC: WEALTH**
**விசேஷித்த தலைப்பு : ஐஸ்வரியம்**

I. பழைய ஏற்பாட்டின் முழுமையான பார்வை
   A. கடவுளே எல்லாவற்றிற்கும் உரிமையாளர்
      1. ஆதியாகமம் 1-2
      2. 1 நாளாகமம் 29:11
      3. சங்கீதம் 24: 1; 50:12; 89:11
      4. ஏசாயா 66: 2

   B. மனிதர்கள் தேவனுடைய ஐஸ்வரியத்தின் உக்கிராணக்காரர்களாய் இருக்கிறார்கள
      1. உபாகமம் 8: 11-20
      2. லேவியராகமம் 19: 9-18
      3. யோபு 31: 16-33
      4. ஏசாயா 58: 6-10

   C. ஐஸ்வரியமானது ஆராதனையின் ஒரு பகுதியாய் இருக்கிறது.
      1. இரண்டு விதமான தசமபாகங்கள்
         a. எண்ணாகமம் 18: 21-29; உபா12: 6-7; 14: 22-27
         b. உபா. 14: 28-29; 26: 12-15
      2. நீதிமொழிகள் 3: 9

   D. உடன்படிக்கையின் நம்பகத்தன்மைக்காக தேவனால் கொடுக்கப்படும் பரிசாக ஐஸ்வரியமானது காணப்பட்டது.
      1. உபாகமம் 27-28
      2. நீதிமொழிகள் 3:10; 8:20-21; 10:22; 15:6

   E. மற்றவர்களின் இழப்பினால் வரும் ஐஸ்வரியத்திற்கு எதிரான எச்சரிக்கை.
      1. நீதிமொழிகள் 21: 6
      2. எரேமியா 5: 26-29
      3. ஓசியா 12: 6-8
      4. மீகா 6: 9-12

   F. ஐஸ்வரியமானது முதன்மையாகாதவரையில் அது பாவமல்ல.
      1. சங்கீதம் 52: 7; 62:10; 73: 3-9
      2. நீதிமொழிகள் 11:28; 23: 4-5; 27:24; 28: 20-22
      3. யோபு 31: 24-28

II. நீதிமொழிகளின் தனித்துவமான பார்வை
   A. ஐஸ்வரியமானது சொந்த முயற்சியின் மேல் தங்கியுள்ளது
      1. சுறுசுறுப்பின்மையும் சோம்பலும் கண்டிக்கப்படத்தக்கது - நீதிமொழிகள் 6:6-11; 10:4-5,26; 12:24,27; 13:4; 15:19; 18:9; 19:15,24; 20:4, 13; 21:25; 22:13; 24:30-34; 26:13-16
      2. கடின உழைப்பு ஆதரிக்கப்படத்தக்கது. நீதிமொழிகள் 12:11,

14; 13:11

B. தரித்திரமும் ஐஸ்வரியமும், நீதியையும் துன்மார்க்கத்தையும் விவரிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. நீதிமொழிகள் 10:1ff; 11:27-28; 13:7; 15:16-17; 28:6,19-20
C. ஐஸ்வரியத்தை பார்க்கிலும் ஞானம் (கர்த்தரையும் அவர் வார்த்தையையும் அறிந்து அவ்வறிவிலே வாழ்வது) சிறந்தது - நீதிமொழிகள் 3:13-15; 8:9-11,18-21; 13:18.
D. எச்சரிப்புக்களும் அறிவுரைகளும்
   1. எச்சரிப்புக்கள்
      a. அயலானுக்கு பிணைப்படுவதை குறித்து எச்சரிக்கையாயிரு. (பிணை) நீதிமொழிகள் 6:1-5; 11:15; 17:18; 20:16; 22:26-27; 27:13
      b. தீய வழிகளில் ஐஸ்வர்யவானாவதை குறித்து எச்சரிக்கையாயிரு. நீதிமொழிகள் 1:19; 10:2,15; 11:1; 13:11; 16:11; 20:10,23; 21:6; 22:16,22; 28:8.
      c. கடன் வாங்குவதை குறித்து எச்சரிக்கையாயிரு. நீதிமொழிகள் 22:7
      d. ஐஸ்வரியத்தின் மீது கண்வைப்பதை குறித்து எச்சரிக்கையாயிரு. நீதிமொழிகள் 23: 4-5
      e. நியாயத்தீர்ப்பின் நாளிலே ஐஸ்வரியம் உதவி செய்யாது. நீதிமொழிகள் 11:4
      f. ஐஸ்வரியத்துக்கு அநேக நண்பர்கள் உண்டு. நீதிமொழிகள் 14:20; 19:4
   2. அறிவுரைகள்
      a. உதாரத்துவம் பாராட்டத்தக்கது - நீதிமொழிகள் 11:24-26; 14:31; 17:5; 19:17; 22:9,22-23; 23:10-11; 28:27
      b. ஐஸ்வரியத்தை பார்க்கிலும் நீதி நல்லது - நீதிமொழிகள் 16:8; 28:6,8,20-22
      c. மிகுதிக்காக ஜெபிக்காது, தேவைக்காக ஜெபிக்க வேண்டும் - நீதிமொழிகள் 30:7-9
      d. ஏழைக்கு கொடுப்பது கர்த்தருக்கு கொடுப்பதற்கு சமன் நீதிமொழிகள் 14:31

III. புதிய ஏற்பாட்டின் கண்ணோட்டம்
A. இயேசு
   1. தேவனையும் அவருடைய வளங்களையும் நம்புவதை விட நம்மையும் நம்முடைய வளங்களையும் நம்பும்படியாக தனித்துவமான ஒரு சோதனையை ஐஸ்வரியம் தருகிறது.
      a. மத்தேயு 6:24; 13:22; 19:23
      b. மாற்கு 10: 23-31
      c. . லூக்கா 12: 15-21,33-34
      d. வெளிப்படுத்துதல் 3: 17-19
   2. எங்களுடைய சரீரத்தேவைகளை கர்த்தர் சந்திப்பார்
      a. மத்தேயு 6: 19-34
      b. லூக்கா 12: 29-32
   3. விதைப்பது அறுவடையுடன் சம்மந்தப்பட்டது (ஆவி மற்றும் சரீரப்பிரகாரமாக)

a. மாற்கு 4:24
b. லூக்கா 6: 36-38
c. மத்தேயு 6:14; 18:35

4. ஐஸ்வரியமானது மனந்திரும்புதலை பாதிக்கும்
   a. லூக்கா 19: 2-10
   b. லேவியராகமம் 5:16
5. பணத்தை சுரண்டி வாழ்வது கண்டிக்கப்பத்தக்கது
   a. மத்தேயு 23:25
   b. மாற்கு 12: 38-40
6. கடைசிக்கால நியாயத்தீர்ப்பானது நம்முடைய பண பயன்பாட்டுடன் தொடர்புடையதாயிருக்கிறது.

B. பவுல்
   1. நீதிமொழிகளை போன்று பிரயோக கண்ணோட்டம் (வேலை)
      a. எபேசியர் 4:28
      b. 1 தெசலோனிக்கேயர் 4: 11-12
      c. 2 தெசலோனிக்கேயர் 3: 8,11-12
      d. 1 தீமோத்தேயு 5: 8
   2. இயேசுவை போல ஆவிக்குரிய கண்ணோட்டம் (பொருட்கள் அழியக்கூடியவை, மனநிறைவுடன் இருத்தல்)
      a. 1 தீமோத்தேயு 6: 6-10 (மனநிறைவு)
      b. பிலிப்பியர் 4: 11-12 (மனநிறைவு)
      c. எபிரெயர் 13: 5 (மனநிறைவு)
      d. 1 தீமோத்தேயு 6: 17-19 (தாராள மனப்பான்மையும் செல்வத்தின் மீதல்லாமல் கடவுள்மீதுள்ள நம்பிக்கையும்)
      e. 1 கொரிந்தியர் 7: 30-31 (பொருள்களின் மாற்றம்)

IV. முடிவுரை

A. ஐஸ்வரியத்தை குறித்து ஒழுங்கமைக்கப்பட்ட வேதாகம இறையியல் கிடையாது
B. இத்தலைப்பை குறித்த உறுதியான வசன பகுதிகள் இல்லை. ஆகவே, வித்தியாசமான பகுதிகளிலிருந்து கருத்துக்கள் சேகரிக்கப்படவேண்டும். இத்தனியான வசனங்களை உங்கள் சொந்த கருத்துக்களுடன்வாசிக்காதபடிக்கு கவனமாயிருங்கள்.
C. ஞானவான்களினால் (ஞானிகள்) எழுதப்பட்ட நீதிமொழிகள், ஏனைய வேதாகம பகுப்புக்களைவிட வித்தியாசமான கண்ணோட்டத்தை கொண்டுள்ளது. நீதிமொழிகளானது பிரயோகரீதியானதும் தனி நபரை நோக்காகவும் கொண்டுள்ளது. இது சமநிலையாக்கப்படவும் மற்றைய வேத பகுதிகளால் சமநிலைப்படுத்தப்படவும் வேண்டும்.
D. எமது அன்றாட தேவைகள் அதனுடைய பார்வையையம் பழக்கவழக்கங்களையும் ஆராய்வதோடு ஐஸ்வரியத்தை வேதாகம வெளிச்சத்தில் காண்ணோக்க வேண்டும். மூலதனத்துவம் அல்லது கம்யூனிசம் நம்முடைய வழிகாட்டியாக இருந்தால் நம்முடைய முன்னுரிமை தவறாக வழிநடத்தப்படும். நாம் ஏன், எவ்வாறு வெற்றிபெறுகிறோம் என்பதே முக்கிய

கேள்விகளாகும், எவ்வளவு திரட்டினோம் என்பதல்ல.

E. ஐஸ்வரியம் திரட்டுதலானது, உண்மையான ஆராதனையுடனும் நம்பகதன்மையுள்ள உக்கிரணத்துவத்துடனும் சமநிலைப்படுத்தப்படவேண்டும். (ஒ. பா. 2 கொரிந்தியர் 8-9).

Copyright © 2014 Bible Lessons International

**NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 1 தெசலோனிக்கேயர் 4: 13-18**

**13அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள்**
**நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க**
**எனக்கு மனதில்லை. 14இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று**
**விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன்**
**அவரோடேகூடக் கொண்டுவருவார்.15கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள்**
**உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம்**
**நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. 16ஏனெனில், கர்த்தர் தாமே**
**ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும்**
**வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்**
**முதலாவது எழுந்திருப்பார்கள். 17பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு**
**எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில்**
**எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.**
**18ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.**

**4:13-5:11** இரண்டாம் வருகையை குறித்தான பின்னணி 5:11ம் வசனம் வரை கூறப்படுகிறது. இதன் நோக்கம் போதகத்துவமே என்பதை நினைவில் கொள்ளவேண்டும் (ஒ.பா. 1 கொரி. 15:58). உபதேசம் கொடுக்கப்பட்டுவிட்டது, ஆனால் தற்போது பரிசுத்த வாழ்க்கைமுறையினை கொண்டு செல்வதற்காக மாத்திரமே!

**4:13 " நீங்கள் அறிவில்லாதிருக்க எமக்கு மனதில்லை"** இது பவுலினுடைய எழுத்துக்ககளில் பொதுவான சொற்றொடராகும் (ஒ.பா. ரோ. 1:13; 11:25; 1 கொரி. 10:1; 12:1; 2 கொரி. 1:8) பொதுவாக இது முக்கியமான கூற்றாக பயன்படுத்தப்படுகிறது, இயேசுவின் "ஆமென் ஆமென்" என்ற கூற்றை போலவே. கிறிஸ்தவ சத்தியத்தின் அறிவானது விழுந்துபோன இவ்வுலகில் கிறிஸ்தவர்களுக்கு ஒரு உறுதியான தன்மையை அளிக்கிறது.

▣ **"பற்றி"** இரண்டாம் வருகையை குறித்த சபையின் சில கேள்விகளை தீமோத்தேயு பவுலுக்கு தெரியப்படுத்தியிருக்கலாம்

1. ஏற்கனவே மரித்த விசுவாசிகளை பற்றி? அவர்கள் கடைசி கால நிகழ்வுகளில் பங்குகொள்வார்களா?
2. இரண்டாம் வருகையை குறித்து ஜனங்கள் ஆச்சர்யமடைவதோடு இதனால் கடைசி கால நிகழ்வுகளுக்கு ஆயத்தமில்லாமல் இருப்பார்களா?

பவுல் "பற்றி" எனும் முன்னிடைச்சொல்லை கொரிந்திய சபையின் கேள்விகளுக்கான மறு உத்தரவுகளை அறிமுகப்படுத்த பயன்படுத்துகிறார் (ஒ.பா.1 கொரி. 7:1,25; 8:1; 12:1; மற்றும் 1 தெச. 5:1).

**NASB “நித்திரையடைந்து இருந்தவர்களினிமித்தம்"**
**NKJV "நித்திரையடைந்தவர்களினிமித்தம்"**
**NRSV, TEV,**
**NJB " இறந்துபோனவர்களிமித்தம்"**

கிரேக்க கையெழுத்துக்கள் இங்கு வேறுபட்டவையாக இருக்கின்றன. (1) சில கையெழுத்து பிரதிகள் நிகழ்கால எச்சவினையை கொண்டுள்ளது, א, A, B மற்றும் (2) சில முற்றுபெற்ற எச்சவினையை கொண்டுள்ளது, D, F, G, K, மற்றும் L என்பவை.

கிரேக்க கையெழுத்துக்கள் இங்கு வேறுபட்டவையாக இருக்கின்றன. (1) சில கையெழுத்து பிரதிகள் நிகழ்கால எச்சவினையை கொண்டுள்ளது, א, A, B மற்றும் (2) சில முற்றுபெற்ற எச்சவினையை கொண்டுள்ளது, D, F, G, K, மற்றும் L என்பவை. சில எழுத்தாளர்கள் பெரும்பாலும் தொடக்கத்தில் இருந்த நிகழ் காலத்தை முற்றுப்பெற்றதாக பின்வருவனவற்றில் மாற்றியிருக்கிறார்கள், மத் 27:52 மற்றும் 1 கொரி 15: 20. (உ.ம். மேட்ஸ்கர், பக். 632)

இயேசு மரணத்தை குறிப்பதற்கு "நித்திரை" என்கிற வழக்கச்சொல்லை பயன்படுத்துகிறார் (ஒ.பா. BDB 101ம்.1, உ.ம்., 2 சாமு. 7:12; 1 இரா. 22:40; புதிய ஏற்பாட்டு குறிப்புகள்: மத். 27:52; யோவான் 11:11-13; அப்போஸ். 7:60; 1 கொரி. 7:39; 11:30; 15:18; 2 பேதுரு. 3:4). ஆங்கில வார்த்தையான "cemetery" "மயானம்" இந்த கிரேக்க வார்த்தையிலிருந்து பிறந்ததாகும்.

இது "ஆத்தும நித்திரை" என்கிற உபதேசத்தை குறிப்பதல்ல - உயிர்த்தெழுதலின் நாளுக்காக விசுவாசிகள் சுயநினைவில்லாதவர்களாய் காத்திருத்தல். புதிய ஏற்பாடானது சுயநினைவுடன், உயிர்த்தெழுதலின் நாள் மற்றும் இரண்டாம் வருகைக்காக வரையறுக்கப்பட்ட ஐக்கியத்துடன் (ஒ.பா. லூக். 16:19-31; 23:43; 2 கொரி. 5:8; பிலி. 1:23) காத்திருத்தலை பற்றி பேசுகிறது.

▣ **"நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து"** இவ்வினைச்சொல்லானது நிகழ்கால செயற்பாட்டு விருப்பநிலையை குறிக்கிறது (ஒ.பா. எபே. 2:12). விசுவாசிகள் சரீரப்பிரகாரமான மரணத்தை குறித்து துக்கித்து கொண்டிருக்கலாகாது ஏனெனில் சுவிசேஷத்தின் உண்மைகளை நாம் அறிந்துள்ளோம்.

1.இயேசு எங்களுக்காக மரித்தார்
2. அவரை எழுப்பின அதே ஆவியானவர் எங்களையும் எழுப்புவார்.
3. அவர் மறுபடியும் எங்களுக்காக வருகிறார்
4. ஏற்கனவே மரித்தவர்கள் அவர்களுடனே இருக்கிறார்கள்

இப்பல தெய்வ வழிபாட்டின் உலகமானது (உ.ம்., "இளைப்பாறுதல்" ஒ.பா. 1 தெச. 5:16) மரணத்தில் ஆறுதலை காணமுடியாதிருக்கிறது. சாக்ரடிஸ் இவ்வாறு கூறுகிறார், " ஓ, நாம் அதிக பாதுகாப்புடனும் குறைவான ஆபத்துடனும் வலிமைமிக்க படகில் பயணம் செய்ய தேவ வார்த்தை உண்டு". விசேஷித்த தலைப்பை பார்க்கவும்: நம்பிக்கை 5:5.

**4:14 "அப்படியானால்"** இது முதல் நிலை நிபந்தனை வாக்கியமாகும். எழுத்தாளனின் காண்ணோக்கம் அல்லது இலக்கிய நோக்கத்தின் அடிப்படையில் உண்மை என கருதலாம்.

▣ **"நாங்கள் விசுவாசிக்கிறோம்"** இது ஒரு முக்கியமான இறையியல் வினைச்சொல்லாகும் (நிகழ்கால செயற்பாட்டு குறி) மனிதர்கள் தங்களுடைய

விசுவாசத்தை கிறிஸ்துவின் மீது வைத்தலை குறிக்கிறது. இக்கிரேக்க வாரத்தையான பிஸ்டோ *pisteuō*, விசுவாசம், நம்பகத்தன்மை அல்லது நம்பிக்கை என மொழிபெயர்க்கப்படுகிறது. விசேஷித்த தலைப்பை பார்க்கவும்: கலா 3:6ல் நம்பிக்கை. தனிப்பட்ட நம்பகத்தன்மையானது புதிய ஏற்பாட்டில் எல்லாவித பொதுவான கிரேக்க வினைச்சொற்களாலும் காட்டப்பட்டுள்ளது.

1. இறந்தகாலம் (இறந்தகால சாதாரண செயல்), அப்போஸ். 15:11; ரோ. 8:24; 2 தீமோ.1:9; தீத்து 3:5
2. நிகழ்காலம் (தொடர்ச்சியான செயல்) 1 கொரி. 1:18; 15:2; 2 கொரி. 2:15; 1 தெச. 4:14
3. முற்றுப்பெற்ற (இறந்தகாலத்தில் நடைபெற்று நிறைவடைந்ததோடு அதேபோல என்றும் நிலைத்திருத்தல்), எபே. 2:5-8
4. எதிர்காலம் (வினைச்சொல்லில் அல்லது பின்னணி), ரோ. 5:9,10; 10:9; 13:11; 1 கொரி. 3:15; பிலி. 1:28; 1 தெச. 5:8-9; எபி. 1:14; 9:28

நித்திய சரீரத்துடன் முக முகமாய் திரித்துவ தேவனிடத்தில் ஒரு நாள் ஐக்கியமாவதற்கு வழிநடத்தும் சீஷத்துவ வாழ்க்கைமுறையின் வாழ்வதற்கு இது ஒரு ஆரம்ப தீர்மானமாகும் (ஒ.பா 1 யோவான் 3:2) இறையியல் வளர்ச்சியானது ரோமர் 8:29-30ல் தெரிந்துகொள்ளுதலில் ஆரம்பித்து பின்பு நீதிமானாக்கப்படல், பின்பு பரிசுத்தப்படுத்தல், பின்பு மகிமைப்படுத்தல் என்பவற்றிக்கூடாக காண்பிக்கப்படுகிறது.

▣ **"அந்த**" இது ஹோடி கிளவுஸ் நற்செய்தியின் உபதேச கருப்பொருளை தருகிறது. விசேஷித்த தலைப்பை பார்க்கவும்: SPECIAL TOPIC: BELIEVE, TRUST, FAITH, AND FAITHFULNESS IN THE OLD TESTAMENT,

▣ "**இயேசு மரித்து திரும்பவும் உயிர்த்தெழுந்தார்"** இவை சரித்திர உண்மைகளை வெளிக்காட்டும் இறந்தகால செயற்பாட்டு அறிகுறியாகும். சுவிசேஷத்தின் சத்தியங்களே விசுவாசிகளின் நம்பிக்கைக்கு ஆதாரமாக இருக்கின்றன (1) பிரதிநிதித்துவப்படுத்தும் மாற்றீடான பலி (ஒ.பா. ஏசா. 53; மாற்கு 10:45; 2 கொரி. 5:21) மற்றும் (2) சரீரரீதியாக, வெளிப்படையான, நித்திய உயிர்த்தெழுதல் (ஒ.பா. 1 தெச. 1:10; 1 கொரி. 15).

▣ **"தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்" இது** மிகவும் கடினமான வார்த்தை ஏனெனில் (அகோ) (agō) எனும் வினைச்சொல்லானது பரந்தளவிலான பொருள் அர்த்தங்களை கொண்டுள்ளது (கொண்டு வருவதற்கு, வழிடத்துவதற்கு, வழிநடத்தி செல்வதற்கு, வெளியே வழிநடத்தி செல்ல, செல்வதற்கு, வெளியே நடத்தி செல்ல, மேலும்). இது, நித்திரையடைந்தவர்கள் பரலோகத்தில் இயேசுவுடன் இருக்கிறார்கள் அல்லது இயேசுவின் வருகையில் அவர்கள் எழுப்பப்படுவார்கள் என பொருள்படுகிறதா?

பின்னணியின் படி பெயர்ச்சொல்லானது இயேசுவை குறிக்கிறது. தெசலோனிக்கேய விசுவாசிகள் இரண்டாம் வருகையை குறித்த பவுலினுடைய படிப்பினையை புரிந்துகொள்ளவில்லை. அவர்களுடைய சபையிலே ஏற்கனவே மரித்தவர்கள் கடைசி கால நிகழ்வுகளில் பங்குகொள்வார்களா என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நினைத்தனர். இது பவுலினுடைய சாதகமான பதிலாகும். அவர்கள் பங்கு பெறுவது மாத்திரமல்ல, அவர்கள் தங்கள் சரீரங்களை முதலாவது பெற்றுக்கொண்டு பரலோக மேகங்களுடனே இயேசுவுடன் இணைந்து வருவார்கள்.

புதிய ஏற்பாடானது மரணத்துக்கும் உயிர்தெழுதலுக்கும் நடுவே விசுவாசிகளின் நிலையை தெளிவாக கூறவில்லை. இவ் வசனத்தினை 2 கொரி 5:6,8 உடன் ஒப்பிடும்போது, உடலற்ற ஒரு காலத்தை ஆராய்வது தர்க்கரீதியாக அவசியமாகிறது. விசுவாசிகள் தேவனுடன் இருக்கிறார்கள், ஆனாலும் உயிர்த்தெழுந்த சரீரம் இல்லாதவர்களை இருக்கிறார்கள்.

**4:15 "கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது**" பவுல் தன்னுடைய சொந்த கருத்தினை முன்வைக்காமல் இயேசுவின் படிப்பினையுடன் தொடர்புபடுத்துகிறார் (ஒ.பா. 1 தெச. 4:2) எவ்வாறாயினும் இக்குறிப்பிட்ட இயேசுவின் வார்த்தையானது சுவிசேஷங்களில் குறிப்பிடப்படவில்லை. இது பின்வருவனவற்றுடன்தொடர்புடையதா என்பது நிச்சயமற்றதாய் உள்ளது.

1. வாய்மூலமான கிறிஸ்தவ பாரம்பரியம் (ஒ.பா.அப்போ. 20:35)
2. இயேசுவின் போதனைகள், மத் 24 அல்லது, மாற்கு 13 அல்லது லூக் 21.
3.பவுல் அரேபியாவில் இருக்கும் போது கொடுக்கப்பட்ட இயேசுவின் தனிப்பட்ட வெளிப்பாடு கலா. 1:17
4. பின்னைய, நேரடி வெளிப்பாடு, 2 கொரி 1:1ff

இச்சொற்றொடரானது பவுல் தான் பெற்றுக்கொண்டதை கூறுவதாக குறிப்பிடுகிறது. அவரது இறுதியியல் கருத்துக்கள் தனித்துவமாக அவருடையதல்ல என இதனால் அர்த்தப்படுத்தபடுகிறது. அவர் பெற்று கொண்டதை அவர் எழுதுகிறார். சிக்கல் யாதெனில், நவீனர்களாகிய நாம், இவ்வெளிப்பாட்டின் ஆதாரத்தையோ அல்லது எவ்வளவில் இது அறியப்பட்டுள்ளது என்பதையோ அறியாமல் இருக்கிறோம்.

| | |
|---|---|
| **NASB, NKJV** | **"கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடு தரித்திருக்கும் நாம்"** |
| **NRSV** | **"கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம்"** |
| **TEV** | **"கர்த்தருடைய வருகையின் நாள் மட்டும் உயிரோடிருக்கும் நாம்"** |
| **NJB** | **"கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம்"** |

நாங்கள் என்ற பெயர்ச்சொல்லானது (1) கர்த்தர் தன்னுடைய வாழ்நாள் காலத்திலே திரும்பி வருவார் என பவுல் எதிர்பாத்திருந்தார் அல்லது (2) நாங்கள் என்பதை தலையங்கமாக பயன்படுத்தியிருக்கலாம் என வெளிப்படுத்துகிறது. விசேஷித்த தலைப்பை பார்க்கவும்: 1 தெச. 2:19 மற்றும் 3:13ல் இயேசுவின் வருகை. எந்நேரத்திலும் கர்த்தர் வருவார் என்கிற இவ்எதிர்பார்ப்பானது எல்லா தலைமுறை விசுவாசிகளுக்கும் சிலாக்கியமாய் இருக்கிறது. ஆனால் ஒன்றுக்கு மாத்திரமே அனுபவிக்க முடியும். வெளிப்பாட்டினை கேள்விகேட்கும் விதமாக பவுல் இதனை நிச்சயமற்றதாக கூறுகிறார் என இது பொருள்படாது.

இது ஒரு இலக்கிய நுட்பமாக இருக்கலாம். ஏனெனில் இயேசு மத்தேயு 24ம் அதிகாரத்தில் (மற்றும் ஒப்பனைகள்) குறிப்பிடுவது போலவும் பேதுரு 2 பேதுரு 3ல் குறிப்பிடுவது போலவும் 2 தெசலோனிக்கேயரில் பவுல் தாமதமான இரண்டாம் வருகையை வலியுறுத்துகிறார்

**SPECIAL TOPIC: THE ANY-MOMENT RETURN OF JESUS VS. THE NOT YET (NT paradox)**

**விசேஷித்த தலைப்பு: எந்நேரத்திலும் இயேசுவின் வருகை மற்றும் இதுவரையில் இல்லை (புதிய ஏற்பாட்டு முரண்பாடு)**

A. புதிய ஏற்பாட்டு கடைசிக்கால வசன பகுதிகளானது, கடைசிக்காலத்தை சமகால நிகழ்வுகளினுடாக கண்ணோக்கின பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களுடைய அறிவின் வெளிப்பாடாகும். (சிறப்பு தலைப்பைப் பார்க்கவும்: தீர்க்கதரிசனம் [பழைய ஏற்பாடு]).

B. மத்தேயு 24, மாற்கு 13 மற்றும் லூக்கா 21 ஆகியவை பல கேள்விகளை ஒரே சமயத்தில் கையாள்வதால் அவற்றை விளக்குவது மிகவும் கடினம். (சிறப்பு தலைப்பைப் பார்க்கவும்: சீடர்களின் இரண்டு கேள்விகளுக்கான பதில்கள்).
   1. ஆலயம் எப்போது அழிக்கப்படும்?
   2. மேசியா திரும்பி வருவதற்கான அடையாளம் என்ன?
   3. இக்காலம் எப்போது முடிவடையும் (ஒ.பா. மத் 24: 3)?

C. புதிய ஏற்பாட்டின் இறையியல் வசன பகுதிகளின் வகைகளானது பெரும்பாலும் திட்டமிட்டு தெளிவற்றதாயும் உயரிய அடையாளத்தன்மையுடையதாயும் உடைய உலகத்தின் முடிவை பற்றிய மற்றும் தீர்க்கதரிசன வார்த்தைகளின் தொகுப்பாகும். (See D. Brent Sandy, *Ploswhares and Pruning Hooks: Rethinking the Language of Biblical Prophecy and Apocalyptic*). சிறப்புத் தலைப்பைப் பார்க்கவும்: இறுதியியல் இலக்கியம்).

D. புதிய ஏற்பாட்டில் பல வசனங்கள் (ஒ.பா. மத்தேயு 24, மாற்கு 13, லூக்கா 17 மற்றும் 21, 1 மற்றும் 2 தெசலோனிக்கேயர் மற்றும் வெளிப்படுத்துதல்) இரண்டாவது வருகையைப் பற்றி பேசுகின்றன. இவ்வசனங்கள் வலியுறுத்துபவை:
   1. நிகழ்வின் துல்லியமான நேரம் அறியப்படவில்லை, ஆனால் நிகழ்வு நிச்சயமானது.
   2. நிகழ்வுகளின் பொதுவான நேரத்தை நாம் அறிந்துள்ளோம், ஆனால் குறிப்பிட்ட நேரம் எதுவென்பது தெரியாது.
   3. அது திடீரென்று எதிர்பாராத நேரத்தில் நடைபெறும்.
   4. நாம் ஜெபத்துடன் ஆயத்தமாக விசுவாசத்துடன் காரியங்களை செய்ய வேண்டும்.

E. ஒரு இறையியல் முரண்பாடானது பின்வருவனவற்றுக்கிடையில் காணப்படுகின்றது.
   1. எந்நேரத்திலும் வருகை (ஒ.பா. லூக்கா 12: 40,46; 21:36; மத் 24: 27,44)
   2. சரித்திரத்தில் சில நிகழ்வுகள் நடைபெற வேண்டும் என்கிற உண்மை (F. கீழே)

F. இரண்டாம் வருகைக்கு முன்பு சில நிகழ்வுகள் நடைபெறுமென புதிய ஏற்பாடு கூறுகின்றது
   1. முழு உலகத்திற்கும் சுவிசேஷமானது பிரசங்கிக்கப்படும் (ஒ.பா. மத் 24:14; மாற்கு 13:10)
   2. பெரும் விசுவாச துரோகம் (ஒ.பா. மத் 24: 10-13, 21; 1 தீமோ. 4: 1; 2 தீமோ. 3: 1ff .; 2 தெச. 2: 3)
   3. கேட்டின் மகனுடைய வெளிப்பாடு (ஒ.பா. தானி. 7: 23-26; 9: 24-27; 2 தெச. 2:

3)
4. தடை செய்கிறவர்/கட்டுப்படுத்துகிறவர் நீக்கப்படும்வரை (ஒ.பா. 2 தெச. 2: 6-7
5. யூத மதத்தவரிடத்தில் ஒரு எழுப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது (ஒ.பா. சகரி. 12:10; ரோமர் 11)

சிறப்பு தலைப்பு: அதிசீக்கிர வருகை,
SPECIAL TOPIC: SOON RETURN

சிறப்பு தலைப்பு: தாமத இரண்டாவது வருகை.
SPECIAL TOPIC: DELAYED SECOND COMING

சிறப்பு தலைப்பு: இயேசுவின் வருகை.
SPECIAL TOPIC: JESUS' RETURN

இரண்டாவது வருகை (விளக்கப்படம்)
SPECIAL TOPIC: SECOND COMING (CHART)

Copyright © 2014 Bible Lessons International

**NASB "முந்திக்கொள்வதில்லை"**
**NKJV, NRSV "எவ்வழியிலும் முந்திக்கொள்வதில்லை"**
**TEV "முந்தி செல்வதில்லை"**
**NJB "எவ்வித முற்பயனும் இல்லை"**

இது உறுதியான இரட்டை எதிர்மறையானதாகும், "இல்லை - இல்லவே இல்லை". இரண்டாம் வருகையின் போது உயிரோடிருக்கும் விசுவாசிகளை போலவே நித்திரையடைந்த பரிசுத்தவான்களும் கடைசிக்கால எல்லா நிகழ்வுகளில் பங்குபெறுவார்கள். KJV யின் "தடுத்தல்" இதனை தவறாக அர்த்தப்படுத்துகிறது. 1611ல் ஆங்கிலத்தில் இது முந்திக்கொள்ளுதலாக அர்த்தப்படுத்தப்பட்டது. எந்த மனிதனாலும் இரண்டாம் வருகையை தடுக்கமுடியாது.

**4:16 "கர்த்தர் தாமே"** இதன் கிரேக்க வார்த்தை இயேசுவின் சுய வருகையை வலியுறுத்துகிறது - ஒரு பதிலீட்டினை அல்ல. (ஒ.பா. யோவான் 5:25-28).

**"பரலோகத்திலிருந்து இறங்கிவருவார்"** விசுவாசத்தின் குடும்பத்தை மீட்பதற்காக இரண்டாம் முறை இயேசுவானவர் பிதாவினுடைய சமூகத்தை விட்டுவிட்டு வருவார்.

**NASB, NKJV "ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும்**
**NRSV "முழக்கத்தின் சத்தத்தோடும் பிரதான தூதனுடைய அழைப்போடும் தேவ எக்காளத்தோடும்"**
**TEV "அங்கு முழக்கத்தின் சத்தம், பிரதான தூதனுடைய அழைப்பு, தேவ எக்காளத்தின் சத்தத்தோடும்"**

**NJB** **"தேவ எக்காளத்தோடு பிரதான தூதனுடைய சத்தம் கட்டளையை பிறப்பிக்கும்"**

இம்மூன்று இசைந்த நிகழ்வுகளுடனும் எத்தனை பரலோக நபர்கள் தொடர்புப்பட்டுள்ளனர் என்பது கேள்வியாகவே உள்ளது. ஆரவாரம் (புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது), ஒரு குரல், ஒரு எக்காள சத்தம் இங்கு காணப்படுகின்றன. , இம்மூன்றும் பிரதான தூதனால் நடாத்தப்படுகிறது. பின்பு இயேசு இறங்கி வருகிறார் என ஜேபி JB கூறுகிறது. ஏனைய மொழிபெயர்ப்புக்கள் இயேசுவிடமிருந்து முதலாவது கூக்குரல், கட்டளை அல்லது ஆரவாரம் பிறக்கிறது, பின்பு பிரதான தூதன் எக்காள சத்தத்தோடு அழைப்பார் என கூறுகிறது.

பரலோகம் இந்நிகழ்வுக்கு ஆயத்தமாயிருக்கிறது - இது கால அட்டவணையில் இருக்கிறது. இந்நிகழ்வு எப்போது, எவ்வாறு நடைபெறும் என்கிற நிச்சயமற்ற தன்மை, வரப்போவது யார் என்கிற அறிவுக்கு முன்பாக ஒன்றுமில்லாதிருக்கிறது. தன்னுடையவர்களை பெற்றுக்கொள்ள இயேசு மறுபடியும் வருகிறார்.

▣ **"பிரதான தூதன்"** இங்கு சுட்டிடை சொல் காணப்படவில்லை, ஆகவே, இது, "ஒரு பிரதான தூதன்" என வாசிக்கப்பட வேண்டும். தானி. 10:13 அநேகம் என குறிப்பிட்டாலும், வேதாகமம் ஒருவரை மாத்திரமே குறிப்பிடுகிறது " மிகாவேல் (ஒ.பா.யூதா 9). அவரே யூதாவின் ஜனத்தின் தூதராய் உள்ளார்.

▣ **"எக்காளம்"** எக்காள சத்தம் கிழக்கு பகுதியில் ராஜரீகத்தின் வருகையை வெளிப்படுத்தும் வழக்கமாகும். (ஒ.பா. எபி. 12:18-19). எவ்வாராயினும் இது வேறு வழிகளிலும் தொழிற்படுகிறது.

1. தேவ நியாயத்தீர்ப்பு, வெளி. 8:2; 11:15-19
2. உயிர்த்தெழுதல், 1 கொரி. 15:52
3. தேவ தூதரினால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் கூடுகையில், மத். 24:31

பழைய ஏற்பாட்டில் தொடர்பாடலின் முக்கிய மூலமாகும். சமய மற்றும் இராணுவ நிகழ்வுகளுக்கு பயன்படுத்தப்பட்டது (ஒ.பா. யாத். 19:16; ஏசா. 27:13; யோவேல் 2:1; செப். 1:16; சகரி. 9:14; 1 கொரி. 15:52).

இரண்டு விதமான எக்காளங்கள் பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படுகின்றன. (1) வெள்ளிப்பூரிகை (ஒ.பா. எண். 10:2,8-10; 31:6) மற்றும் (2) செம்மறியாட்டு கடாவும் இடதுபக்க கொம்பு, எக்காளம் என்று அழைக்கப்பட்டது (ஒ.பா. யாத். 19:16,19; 20:18; லேவி. 25:9; யோசுவா 6).

இம்மூன்று சத்தங்களும் (சத்தம், குரல், எக்காளம்) பிரதான தூதரின் சத்தத்தை குறிப்பதாக இருக்கலாம் ஏனெனில் வெளி 4:1ல் தூதனுடைய குரல் எக்காள சத்தம் என அழைக்கப்பகிறது.

**SPECIAL TOPIC: HORNS USED BY ISRAEL**
**விசேஷித்த தலைப்பு: இஸ்ரவேலினால் பயன்படுத்தப்பட்ட கொம்புகள்**

கொம்புகள்/எக்காளம் என்பவற்றுடன் நான்கு எபிரேய வார்த்தைகள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.

1. செம்மறியாட்டு கடாவின் கொம்பு (BDB 901, KB 1144) - காற்று கருவியாக

பயன்படுத்தப்பட்டது, ஒ.பா. யோசுவா. 6:5. ஆபிரகாம், ஈசாக்குக்கு பதிலாக பலிகொடுத்த கொம்புகளால் பிடிபட்டிருந்த செம்மறியாட்டு கடாவினை குறிக்க ஆதி 22:13ல் இதே வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

2. எக்காளம் (BDB 1051) - காட்டுச் செம்மறியாடிற்கு பயன்படுத்தப்படும் அசிரியரின் பதம் (ibex). இக்கொம்பானது யாத் 19:16,19ல் சீனாய் மற்றும் ஓரேப் மலையில் பயன்படுத்தப்பட்ட கொம்பினை குறிக்கிறது. #1 மற்றும் #2 ஆனது யோசுவா 6:5லும் உள்ளது. இது பின்வருவனவற்றினை தெரிவிக்க பயன்படுத்தப்பட்டது.
   a. ஆராதனை நேரங்கள் (ஒ.பா. லேவி. 25:9)
   b. யுத்த நேரங்கள் (உ.ம். எரிகோ இரண்டுமாக இருந்தது, ஒ.பா. யோசுவா. 6:4; நியா. 3:27; 6:34; 1 சாமு. 13:3; எரே. 4:5; ஓசியா. 5:8)
   c. புதிய ராஜாவை அபிஷேகம் பண்ணும்போது 1 இராஜா. 1:34,39
   d. தேவனால் ஊதப்படும் போது, சகரி. 9:14

3. செம்மறியாட்டு கொம்பு" (BDB 385, KB 398) - பொனீசியர்கள் செம்மறியாட்டுக்கு கொடுத்த பதத்திலிருந்து வந்தது (ஒ.பா. யோசுவா. 6:4,6, 8,13). இது யூபிலி ஆண்டையும் குறிப்பதாக அமைகிறது (ஒ.பா. லேவி. 25:13, 28, 40, 50, 52, 54; 7:17, 18, 23, 24).

   இம்முதல் மூன்று வார்த்தைகளும் வேறுபட்ட நோக்கங்களின்றி இணைச்சொல்லாக காணப்படுகின்றது. மிஷ்னா, யூதவேதக் கட்டளைத்தொகுதியானது செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் கலைமானின் கொம்புகளை பயன்படுத்த அனுமதி அளித்துள்ளது, ஆனால் பசுவின் கொம்பு அனுமதிக்கப்படவில்லை.

4. "எக்காளங்கள்" (BDB 348, KB 344) - பெருமளவில் விரித்தல் என்கிற வினைச்சொல்லிலிருந்து வந்தது. இது நேரான எலும்பை (விலங்கின் கொம்பை போல வளைந்தது அல்ல) குறிக்கிறது. இவை வெள்ளியினால் செய்யப்பட்டவை (எகிப்திய உருவத்துக்கு ஒழுங்குக்கும் பிற்பாடு) இவை பின்வருவனவற்றுக்கு பயன்படுத்தப்படுகின்றன.
   a. வழிப்பாட்டு சடங்குகளின் போது (ஒ.பா. எண் 10: 2,8,10; எஸ்றா 3:10; நெகேமியா 12: 35,41)
   b. இராணுவ நோக்கங்களுக்காக (ஒ.பா. எண் 10: 9; 31: 6; ஓசியா 5: 8)
   c. அரச நோக்கங்களுக்காக (ஒ.பா. 2 இராஜா. 11:14)

இவற்றுள் ஒரு இரும்பு கொம்பு ரோமரிலுள்ள டைட்டஸ் வளைவில் சித்தரிக்கப்பட்டுள்ளது; அத்துடன் ஜோசபசும் ஆண்டிக்கில் Antiq. 3.12.6 விவரித்துள்ளார்.

Copyright © 2014 Bible Lessons International

▣ **"கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்"** மரணத்துக்கும் உயித்தெழுதலின் நாளுக்கும் நடுவே மரித்தவர்கள் எங்கு செல்வார்கள் என்பதை குறித்து இக்கூற்று குழப்பத்தை விளைவிக்கிறது. அவர்கள் கல்லறையில் இருப்பார்கள் என இவ்வசனம் கூறுகிறது (ஒ பா. மத். 27:52-53). எவ்வராயினும், 2 கொரி. 5:6,8, அவர்கள்

தேவனுடன் இருப்பதாக கூறுகிறது. உடலற்ற நிலை காண்பிக்கவில்லை. வில்லியம் ஹென்ரிக்சனின், இதற்கு பின்பதான வாழ்க்கையை குறித்த வேதாகமம் *The Bible On the Life Hereafter* என்பதை பார்க்கவும்.

அநேக மொழிபெயர்ப்புகள், பரிசுத்தவான்கள் தேவனோடு/இயேசுரோடு இருப்பதாகவும் அவருடன் திரும்பி வருவார்கள் எனவும் மொழிபெயர்க்கின்றன. (ஒ.பா. NASB). TEV யின் இன்னுமொரு கண்ணோட்டம், கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைத்தவர்களாய் மரித்தவர்கள் முதலாவது உயிர்த்தெழுவார்கள்.

**4:17 "எடுத்துக்கொள்ளப்பட்டு"** நம்முடைய இறையியல் எண்ணக்கருவான "எடுத்துக்கொள்ளப்படல்" இவ்வினைச்சொல்லை தழுவியது. எடுத்துக்கொள்ளப்படல் என்பது இலத்தீன் மொழியினால் கொடுக்கப்பட்ட கிரேக்க வினைச்சொல். இது “பலவந்தமாக எடுத்துக்கொள்ளல்” என்பதை குறிக்கும் (ஒ.பா. யோவான் 6:15; 10:12, 28-29) (harpazō - ஹர்பசோ - எதிர்கால செயற்பாட்டு சாதாரண நிலை). இந்நிகழ்வு 1 கொரி 15:51-52லும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அநேகர் இக்கடைசிக்கால நிகழ்வை நிராகரிக்கின்றனர். சிலர், இப்பூமியில் கிறிஸ்துவின் 1000 வருட அரசாட்சிக்கு முன்பு ரகசிய வருகையை (ஒ.பா. மத். 24:40-42) எதிர்பார்த்திருக்கின்றனர். பெரும்பாலும் ஏழு வருட உபத்திரவ காலம் (ஒ.பா. தானி. 7:25; 9:27) இதனுடன் தொடர்புபட்டதாய் இருக்கிறது. சில இறையியலாளர்கள் வருகையானது ஏழு வருடத்தின் ஆரம்பத்தில், மத்தியில், அல்லது கடைசியில் நடைபெறுமென நம்புகிறார்கள். இக்கடைசிக்கால நிகழ்வுகளின் ஒழுங்கும் தன்மையும் கூடுமானவரை தெளிவற்றதாகவே காணப்படுகின்றது. இன்றே நிலையை பிடித்திருப்பது இங்கு பொருத்தமற்றதாகும்.

விசுவாசிகள் கர்த்தரை வானத்திலே சந்திக்க போகிறார்கள்., ஏனெனில் புதிய ஏற்பாட்டில் வானமானது சாத்தான் ஆளும் மண்டலமாக பார்க்கப்பட்டதுடன் (ஒ.பா. எபே. 2:2) வான மண்டலத்தின் (சூழல்) கீழ்ப்பகுதி அசுத்தமானது, ஆகவே அது சுத்தமற்ற ஆவிகளின் ஆளுகை காணப்படும் இடம் என கிரேக்கர்கள் நினைத்தனர். சாத்தானுடைய ராஜ்யத்தின் மத்தியில் அதனுடைய முழுமையான அழிவினை காண்பிக்கும் விதமாக விசுவாசிகள் தேவனுடன் மறுபடியும் இணைவார்கள்.

▣ **"அவர்களோடேகூட"** இச்சபையானது இரண்டாம் வருகையை குறித்த பவுலின் போதனையை தவறாக புரிந்துக்கொண்டுள்ளது. இக்கேள்விகளுக்கு பதிலளிப்பதற்காக 1 மற்றும் 2ம் தெசலோனிக்கேய நிரூபங்களை பவுல் எழுதுகிறார். சபையானது பின்வருவற்றை அறிய விரும்பியது (1) மரித்து போன கிறிஸ்தவர்கள் இக்கடைசிகால நிகழ்வுகளில் பங்குபெறுவார்களா? மற்றும் (2) இறந்துபோன மற்றும் உயிரோடிக்கும் விசுவாசிகள் எப்போது ஒன்று சேர்வார்கள்? இக்கருப்பொருளானது 2 தெச. 2:1லிருந்து எடுக்கப்பட்டது.

▣ **"மேகங்கள்மேல்"** பாரம்பரியமாக மேகங்களானது தெய்வத்தின் போக்குவரத்து ஊடகமாக கருதப்பட்டது (ஒ.பா. தானி. 7:13; மத். 24:30; 26:64; அப்போ. 1:9-11; வெளி. 1:7). இக்காட்சிப்படமானது பழைய ஏற்பாட்டு யாத்திராகமத்தில் காணப்படும் ஷெக்கினா மேகத்தை நினைவுப்படுத்துகிறது (ஒ.பா. யாத். 13:21,22; 14:19,20,24; 16:10; 19:9,16; 24:15,16,18; 34:5; 40:34-38) இது தேவனுடைய பிரசன்னம் அவருடைய ஜனங்கள் மத்தியில் இருப்பதை சித்தரிக்கிறது.

**SPECIAL TOPIC: COMING ON THE CLOUDS (several Hebrew words, but mostly *anan*, BDB 777, KB 857)**
**விசேஷித்த தலைப்பு: மேகங்கள் மேல் வருதல் (சில எபிரேய பதங்கள், ஆனால் பெரும்பாலும் ஆனன் *anan*, BDB 777, KB 857)**

கடைசிக்கால அடையாளத்தின் மிகமுக்கியமானது மேகங்கள் மேல் வருதலாகும். பழைய ஏற்பாட்டில் மூன்று தனித்துவமான வழிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1. தேவனுடைய நேரடியான பிரசன்னத்தை வெளிப்படுத்த ஷெக்கினா, மகிமையின் மேகம், (ஒ.பா. Exod. 13:21; 14:19,20,24; 16:10; 19:9; Num. 11:25; Neh. 9:19; விசேஷித்த தலைப்பு: மேகம் . . .ஸ்தம்பம் பார்க்கவும்)
2. மனிதன் அவரை பார்த்து சாகாதபடிக்கு அவருடைய பரிசுத்தத்தை மறைப்பதற்கு (ஒ.பா. யாத். 33:20; ஏசா. 6:5; விசேஷித்த தலைப்பு: மனிதன் தேவனை கண்டு உயிர்வாழ முடியுமா.பார்க்கவும்)
3. தேவனின் போக்குவரத்து ஊடகம் (ஒ.பா. சங். 18: 9; 104: 3; ஏசா. 19: 1; தானி. 7:13; நெகே. 1: 3; அப்போஸ்தலர் 1: 9,11; 1 தெச. 4:17)

தானியேல் 7:3ல் மேகமானது மனித, தேவ மேசியாவின் போக்குவரத்து ஊடகமாக பயன்படுத்தப்படுகின்றது. விசேஷித்த தலைப்பு: மேசியா மற்றும் விசேஷித்த தலைப்பு:பழைய ஏற்பாட்டில் இயேசுவின் தெய்வத்தன்மை.. பார்க்கவும்) தனியேலிலுள்ள இத்தீர்க்கதரிசனமானது முற்பதிற்க்கு மேற்பட்ட தடவை புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. பரலோக மேகங்களுடனே மேசியாவின் இத்தொடர்பானது பின்வருவனவற்றில் காணப்படுகின்றது.

1. இயேசுவின் இரண்டாவது வருகை, மத். 24:30; 26:64; மாற்கு 13:26; 14:62; அப்போஸ்தலர் 1:11; வெளி 1: 7
2. இயேசு மீண்டும் பரலோகத்திற்கு செலுத்தல், அப்போஸ்தலர் 1: 9
3. இயேசுவை ஆகாயத்தில் சந்திப்பது, 1 தெச. 9:17

சிறப்பு தலைப்பு: மேகம். . .ஸ்தம்பம்

சிறப்பு தலைப்பு: மனிதர்கள் தேவனைப் பார்த்த பிறகு வாழ முடியுமா?

சிறப்பு தலைப்பு: மனுஷ குமாரன்

Copyright © 2014 Bible Lessons International

▣ **"எதிர்கொண்டுபோக"** இகிரேக்க வார்த்தை அபநேசிஸ், *apanēsis*, ஒருவரை சந்தித்து பின்பு அவருடன் இணைந்து செல்லுதல் (ஒ.பா. மத். 25:6; அப்போ. 28:15). ஆகவே விசுவாசிகள் கர்த்தரை சந்தித்து புதிதாக படைக்கப்பட்ட உலகத்துக்கு அவருடன் செல்வார்கள்!

▣ **"ஆகாயத்தில்"** ஆகாயமானது சாத்தானினதும் அவனது பரிவாரத்தினதும் ஆளுகையாய் இருக்கிறது (ஒ.பா. எபே. 2:2). பூரணமான வெற்றியை காண்பிப்பதற்காக கர்த்தரை நாங்கள் அங்கே சந்திக்க போகிறோம். ஆகாயத்திலே விசுவாசிகள்

கிறிஸ்துவை சந்திக்கும் போது, 2 பேதுரு 3:10ன், பரிசுத்தமாக்குதலும் புதிதாக்குதலுமான தீர்க்கதரிசனத்துக்கமைய பரலோகமானது மறுசீரமைக்கப்பட்ட ஏதேன் தோட்டத்தை போல இருக்குமென விவரிக்கப்பட்டுள்ளது. (ஒ.பா. ஆதியாகமம் 1-2 வெளிப்படுத்தல் 21-22 உடன் ஒப்பிடப்பட்டுள்ளது).

▣ **"நாங்கள் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்"** இதைவிட எதுவும் கூறமுடியாது (ஒ.பா. சங். 23:6). 1ம் தெசலோனிக்கேயரில் இரண்டாம் வருகையானது திரும்ப திரும்ப குறிப்பிடப்பட்டுள்ளது (ஒ.பா. 1 தெச. 1:10; 2:19; 3:13; 4:13-18; 5:1-11). இந்நிரூபத்திலோ அல்லது 2ம் தெசலோனிக்கேயரிலோ பவுல் ஆயிரம் வருட ஆட்சியை குறிப்பிடவில்லை மாறாக, தானி 7:13-14 போல, நித்திய ஆளுகையை பற்றி குறிப்பிடுவதை அவதானிக்க முடியும்.

நித்திய ராஜ்யமானது இயேசுவின் வருகையிலே ஆரம்பிக்கிறது என்பதை பவுலினுடைய சொற்பதம் காட்டுகின்றது. 1 கொரி. 15:50-58ல் குறிப்பிடப்பட்டுள்ளது போல ஏனைய கடைசிக்கால நிகழ்வுகள் குறிப்பிடப்படவில்லை. இயேசு முழுமையாக இவ்வுலகுக்கு திரும்பி வருவார் என்பதை கூட பவுல் சுட்டிக்காட்டவில்லை. ராபர்ட் ஜி.க்ளோஸஸ் இன் Robert G. Clouses' *The Meaning of the Millennium*, இல் நான்கு விதமான ஆயிரமாண்டு நிலைகளும் வித்தியாசமான எழுத்தாளர்களினால் எழுதப்பட்டு கோர்க்கப்பட்டுள்ளது. ஆயிரமாண்டு குறித்த மாறுத்தரம் ஒன்றில் ஜோர்ஜ் இ.லாட் பின்வரும் ஆச்சர்யமான கூற்றை கூறுகிறார், "இயேசுவின் இரண்டாம் வருகையின் போது புதிய ஏற்பாட்டின் அநேக நிகழ்வுகள் முற்று பெறுவது முன்னாயிரக்கொள்கையை உடையவர்களுக்கு கடினமான காரியம் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்" (பக்.189-190). இதனையே பவுல் மேலதிக விளக்கங்கள் இல்லாமல் உறுதிப்படுத்துகிறார்.

**4:18** இவ்வசனமானது 1 தெச 4:13 போலவே பவுலினுடைய கடைசிக்கால நிகழ்வுகளின் சமர்ப்பணத்தின் நோக்கத்தினை காண்பிக்கின்றது. மரித்துப்போன தங்களுடைய சக விசுவாசிகளை குறித்து விசுவாசிகள் மிகவும் கவலையாய் இருந்தனர். அவர்கள் கர்த்தருடைய வருகையின் ஆச்சர்யமான நிகழ்வுகளில் பங்குபெறுவார்களா? மரித்துப்போன மற்றும் உயிரோடிருக்கும் விசுவாசிகள் அனைவரும் சந்தேகமின்றி இரண்டாம் வருகையில் பங்குகொள்வார்கள் என பவுல் அவர்களுக்கு உறுதியளிக்கிறார். இவ்வசனமானது பிரதானமாக போதகத்துவமானது, (1 கொரி.15:58 இணை போல) படிப்பினைக்குரியதல்ல. மற்றைய இறையியல் வசனங்களுடன் இது எவ்வாறு தொடர்புபடுகிறது என்பது தெளிவற்றதாகவே இருக்கிறது.

▣ **"ஆறுதல்"** இது நிகழ்கால செயற்பாட்டு கட்டளை நிலை.

**கலந்துரையாடல் கேள்விகள்**

இது ஒரு ஆய்வு வழிகாட்டி வியாக்கியானவியலாகும். அதாவது வேதாகமத்தைப் பற்றிய உங்கள் சொந்த விளக்கத்திற்கு நீங்களே பொறுப்பு. நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் இருக்கும் வெளிச்சத்தில் நடக்க வேண்டும். நீங்கள், வேதாகமம் மற்றும் பரிசுத்த ஆவியானவர் மொழிபெயர்ப்பில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும். இதை நீங்கள் ஒரு வியாக்கியானவியலாளரிடம் விட்டுவிடக்கூடாது.

புத்தகத்தின் இந்த பகுதியியை இதன் முக்கிய பிரச்சினைகள் மூலம் சிந்திக்க உதவும் வகையில் இந்த விவாத கேள்விகள் வழங்கப்படுகின்றன. அவை உறுதியானவை அல்ல, சிந்தனையை தூண்டக்கூடியவை.

1. இரண்டாம் வருகையை குறித்து வேதாகமத்தில் எங்கு மிகவும் தெளிவாக கூறப்பட்டுள்ளது?
2. பவுல் இவ்வசனத்தை எழுதுவதின் நோக்கம் யாது?
3. எடுத்துக்கொள்ளப்பட்டல் என்றால் என்ன? யார் யார் ஈடுப்பட்டுள்ளார்? அது எப்போது நடைபெறும்?

Copyright © 2013 Bible Lessons International